# விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்த கருணா அணியில் பிளவு

**மூலம்: டி.பி.எஸ்.ஜெயராஜ்**

**தமிழில்: உதயம்**



**த**ம்மைத் தாமே அழிக்கும் மோதல்கள் தமிழ் ஆயுதக்குழுக்களின் வரலாற்றில் புதிதல்ல. இம்மோதல்கள் இரு குழுக்களுக்கிடையே ஏற்படலாம் அல்லது ஒரு குழுவினுள் ஏற்பட்ட உட்பூசலால் ஏற்பட்டு அக்குழுவை சிதறவைக்கலாம். தம்மைத்தாமே அழிக்கும் மோதல் வியாதி இப்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளையும் (TMVP) பீடித்துவிட்டது. TMVP யின் தலைவர் கருணாவுக்கும் அதன் தளபதி பிள்ளையானுக்குமிடையில் கடும் பூசல்கள் தொடங்கியுள்ளன. இரு அணிகளும் கிழக்கிலங்கையில் மோதியுள்ளன.

பிள்ளையைக் கிள்ளி தொட்டிலை ஆட்டுவதுபோல் இலங்கை இராணுவம் இப்போது இரு அணிகளையும் சமாதானப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் முதலில் இரு அணிகளுக்கிடையில் பூசலை மறைமுகமாக ஏற்படுத்தினர். இப்போது வெளிப்படையாக இரு அணிகளுக்கிடையில் சமாதானத்தை ஊக்குவிக்கின்றனர். ஆயினும் இரு அணியினருக்குமிடையில் உள்ள பூசல் தீவிர நிலையை அடைந்துள்ளதால், சமாதானம் நடைமுறையில் சாத்தியமற்றது என அஞ்சப்படுகின்றது.

பிள்ளையான் முன்பு கருணாவின் நம்பிக்கைக்குரிய விசுவாசியாக இருந்தவர். கருணா தனது பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிநாடு சென்றபோதும் பின் பனாகொடை இராணுவ முகாமில் தங்கியிருந்தபோதும், பிள்ளையானே கிழக்கில் சுறுசுறுப்பாக செயற்பட்டவர். TMVP இராணுவ புலனாய்வுப் பகுதியினரின் (MI) கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் இன்று MI அதிகாரிகளே அதனை வழிநடத்துகின்றனர். கருணா ஓர் விளம்பரப்பெயராக இருக்கின்றது. அநேகமாக TMVP யில் கருணாவின் ஆதிக்கம் மிகக்குறைவாகவே உள்ளது. ஆரம்பத்தில் கருணாவின் அணி தமிழ் ஈழ மக்கள் விடுதலைப் புலிகள் என அழைக்கப்பட்டது. MI அதிகாரிகள் கருணா மூலம் ஈழம் என்ற சொல்லை இல்லாமல்செய்துவிட்டனர்.

TMVP ஓர் கட்டுக்கோப்பான அணியாக செயற்பட அனுமதிக்கப்படவில்லை. சின்னத்தம்பி, மங்களம் மாஸ்ரர், இனியபாரதி போன்ற தளபதிகளுக்கு பல பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டன. அத்துடன் அவர்கள் வேறுபட்ட MI அதிகாரிகளுக்கு பொறுப்பாக இருந்தனர். பிள்ளையான் எல்லாத் தளபதிகளுக்கு மேலான ஒரு பதவியை வைத்திருந்தார். MI இன் அறிவுறுத்தல்கள் பிள்ளையான் மூலம் TMVP க்கு கொடுக்கப்பட்டது. கருணாவுக்கும் மற்றைய தளபதிகளுக்கும் பிள்ளையான் ஊடாகவே தகவல் பரிமாற்றங்கள் நடந்தன.

கருணாவும் அவரின் குடும்பத்தினரும் வெளிநாட்டில் இருந்தபோது, பிள்ளையானே அவர்களுக்கு பண உதவி செய்தார். விடுதலைப்புலிகள் கருணா அணியின் எட்டுப்பேரை கொன்றபோது அதன் நிதியைக் கையாண்ட குகநேசன் கொல்லப்பட்டார். குகநேசனால் முதலீடு செய்யப்பட்ட பணத்தை கருணா அணியினர் இழக்கநேரிட்டது.

பிள்ளையானே வரிகள் மூலமும் ஆட்களைக்கடத்தி பணயப் பணம் பெறுவதின் மூலமும், கருணாவுக்கு தொடர்ந்து நிதி கொடுத்துவந்தார். MI, கருணா-பிள்ளையான் உறவைப்பற்றி அவ்வளவாக மகிழ்ச்சி அடையவில்லை. இருவருக்குமிடையில் பிளவை உண்டாக்கவிரும்பினர். அவர்கள் எண்ணம் என்னவெனில் இருவர்களையும் தனியாக வைத்திருந்து சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு வாலாட்டும் எடுபிடிகளாக இருக்கவேண்டும் என்பதாகும்.

பிள்ளையான் கப்பப்பணம் பெருமளவில் பெற்றுவந்தார். MI க்கு தெரிந்தும்தெரியாமலும், பிள்ளையான் காசு பறிக்கும் மோசடியில் ஈடுபட்டுவந்துள்ளார். MI க்கு அவற்றின் முழுவிபரங்களும் தெரியாது. எனவே MI அவரின் கொட்டத்தை அடக்கவிரும்பியது.

கருணாவோ கிழக்கு மாகாணம் கூறுபோடுவதை விரும்பவில்லை. அத்துடன் அவர், கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாக அலகை ஏற்படுத்தி அதனை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பினார். இதை MI விரும்பவில்லை. எனவே MI கருணாவை மட்டந்தட்ட விரும்பியது.

இதற்குச் சிறந்தவழி, இருவருக்குமிடையில் பூசலை ஊக்குவித்து, தமது செல்வாக்கை அவர்கள்மேல் அதிக அளவில் வைத்திருக்கலாம் என்பதாகும். அத்துடன் TMVP பலவீனமடையும். இதற்காக லண்டனில் சுமார் 30 ஆண்டுகள் வசித்த கிருஷ்ணர் என்பவரின் உதவி நாடப்பட்டது. புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட கிருஷ்ணபிள்ளை என்ற கிருஷ்ணர் விடுதலைப்புலிகள், PLOTE, ENDLF போன்ற அமைப்புகளில் காலத்துக்குக்காலம் அங்கத்தவராக இருந்தவர்.

1990 ஆண்டிலிருந்து அவர் MI க்கு பல உதவிகளை செய்துவந்தவர். பணமோசடி செய்ததற்காக 1986ல் PLOTE ல் இருந்து விலக்கப்பட்டார். ENDLF க்கும் TMVP க்கும் ஏற்பட்ட தொடர்பு MI க்கு கவலையை ஏற்படுத்தியது. கிருஷ்ணர்மூலம் சிறிதுகாலம் இருந்த இந்த உறவு முறிக்கப்பட்டது. கிருஷ்ணன் பின் கருணாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பிள்ளையான் கப்பமாகப்பெற்ற பணத்தைப்பற்றி பிரஸ்தாபித்தார். இதன்பின் கருணாவும் பிள்ளையானும் இப்பணம்பற்றி தொலைபேசியில் வாக்குவாதப்படத்தொடங்கினர்.

கருணா, பிள்ளையானை அவரிடம் உள்ள முழுப்பணத்தைத் தருமாறும், கணக்கு விபரங்களை சமர்ப்பிக்கும்படியும் கோரினார். பிள்ளையானோ கருணாவின் விசுவாசியான இனியபாரதியைக் கொல்வதற்கு ஓர் கொலைக்குழுவை மட்டக்களப்புக்கு அனுப்பினார். ஆயினும் பாரதி தப்பிவிட்டார். அவ்வாறே கிருஷ்ணரை கொல்ல பிள்ளையான் எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இதைத்தொடர்ந்து TMVPல் அணிகள் உருவாகின. பிள்ளையான் அணியைச்சேர்ந்தவர்கள், பொலனறுவைக்கும், திருமலைக்கும் தப்பி ஓடினர். கருணா அணியினர் மட்டக்களப்பில் தமது நிலைகளைப்பலப்படுத்தினர். கிழக்கு மாகாணக்களத்தில் பணிபுரியும் படையினர் பிள்ளையான்மீது அனுதாபம் உடையவர்கள். அவர்கள் பிள்ளையானுடனும் பழகியவர்கள். ஆயினும் இராணுவ, பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டபீடங்கள் கருணாவை இன்றைய காலகட்டத்தில் விரும்புகின்றனர். வாகரை, படுவான்கரை யுத்தத்தில், இராணுவம் வெற்றிபெற அவரின் அறிவும் திறமையும் பெருமளவில் உதவியது முக்கியகாரணமாகும். கிழக்கு மாகாணத்தைக்கூறுபோடவும், சிங்கள மயப்படுத்துவதற்கும் கருணா தேவைப்பட்டவராக இருக்கின்றார். அதன்பின்பு கருணா பயனற்ற ஒருவராக இருப்பார்.



இரு அணியினரையும் சமரசம்செய்யும் கூட்டத்தை இராணுவத்தினர் வாகரையில் கூட்டினர். கருணாவும், பிள்ளையானும் இக்கூட்டத்தில் பங்குகொள்ளவில்லை. அவர்களின் அணியைச்சேர்ந்தவர்கள் இக்கூட்டத்துக்குச்சென்றனர். இராணுவத்தின் திட்டத்தின்படி மட்டக்களப்புக்கு தெற்கேயுள்ள ஆரையம்பதி தொடங்கி பொத்துவில்வரை கருணாவின் கட்டுப்பாட்டில் இருக்கும். ஆனுமுகத்தான் குடியிருப்பு தொடங்கி வெருகல்வரை பிள்ளையான் கட்டுப்பாட்டில் இருக்கும். மட்டக்களப்பு நகரம் இருவருக்கும் பொதுவாகஇருக்கும்.

கரையோரப்பகுதிபற்றி பின்பு தீர்மானிக்கப்படும். இச்சமாதானத்திட்டத்தை இரு அணியினரும் ஏற்கவில்லை. இரு அணியினரும் தாமே கிழக்கு மாகாணத்தின் ஏகப்பிரதிநிதிகள் என வாதிட்டனர். விவாதம் சூடுபிடித்து, மோதலாகமாறி, பின் இனியபாரதியும், சந்திவெளி மாமாவும், கைத்துப்பாக்கியால் சுடும் அளவுக்கு மோசமாகமாறியது. இரு அணியினரும், மற்ற அணியினரைச் சேர்ந்தவர்களை பணயக் கைதிகளாகப்பிடித்துச்சென்றனர். இராணுவத்தினர் இந்தப் பணயக்கைதி விவகாரத்தில் தலையிடவில்லை. மாறாக பணயக்கைதிகளைக்கொண்டுசெல்வதற்கு பாதுகாப்புகொடுத்தனர்.

கருணா அணியினரால் இவ்வாறாககொண்டு செல்லப்பட்டவர்களில் இருவர் சிந்துஜனும் விஜிதரனும். இவர் பார்ரோட்டில் இருந்த முகாமிலிருந்து தப்பியோட முயன்றபோது கருணா அணியினரால் கலைத்து துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. விஜிதரன் ஸ்தலத்திலே கொல்லப்பட்டார். காயப்பட்ட சிந்துஜன் வெட்டிக்கொல்லப்பட்டார்.

சிந்துஜன் கடந்த வருடம் ஜனவரிமாதம் 7 TRO ஊழியர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்படுவதற்கும் ஓர் பெண் ஊழியர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதற்கும் காரணமாக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கருணா அணியினர், பிள்ளையான் அணியின் வீடுகளைத் தாக்கி சேதப்படுத்தினர். அங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் சூறையாடப்பட்டன. தளபாடங்கள் உடைக்கப்பட்டன. இந்த மோதலால் கிழக்கு மாகாணத்தில் பிள்ளைகள் கடத்தப்படுவது கணிசமான அளவு குறைந்துள்ளது. கொழும்பிலும் வர்த்தகர்கள் பணத்துக்காகக் கடத்தப்படுவதும் குறைந்துள்ளது.

இராணுவத்தினர் சமாதானம் செய்யும்முகமாக இரு அணியினரையும் தனியாகச் சந்தித்துள்ளனர். கருணா-பிள்ளையான் பிளவு நிரந்தரமாக மாறினால் TMVP தன்னைத்தானே அழிக்கும் மோதல்களால் பலவீனமடையும். மகிந்தவின் சிந்தனையிலுள்ள கிழக்கு மாகாணத்தைக்கூறுபோடுவது, சிங்கள மயப்படுத்துவதும் எந்த அளவுக்குப் பாதிக்கும் என பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கருணா-பிள்ளைான் மோதல்களால் இறுதியில் வெற்றிபெறுபவர் "பிரபாகர"னாக இருக்கலாம்.

**குறுங்கதை**

# பாசம் பொல்லாதது

**சி**வசம்பு தனது தங்கையின் திவசதினத்திற்குப் போக வேண்டும் என்ற நினைப்பில் அயர்ந்து தூங்கி விட்டார். சிவசம்புவிற்கு அறுபத்தைந்து வயதாகிறது. தனது மகன் மருமகளுடன் இருக்கின்றார். கடந்த வருஷம் அவரது தங்கை பரமேசு அகால மரணமடைந்துவிட்டாள். உறக்கத்தில் சிவசம்புவிடம் தங்கை கதைத்தாள்.

"அண்ணா! உங்கை இருந்து என்ன செய்யுறாய்? நீயும் கெதியிலை மேலை வாப்பா. சும்மா ஜாலியா பாக்கு வெத்திலையும் போட்டுக் கொண்டு ஊர்க்கதையள், வயல்வம்புகள் கதைச்சுக் கொண்டு இருக்கலாம்."
"அது சரி. எப்படி வாழ்ந்த குடும்பம் நாங்கள்! நான் இப்ப உங்கை வாறதா உத்தேசமில்லை. பேரப்பிள்ளையளின்ர சடங்குகளையும் முடிச்சுக் கொண்டுதான் வருவன்."

கதவு தட்டும் சத்தம் கேட்டது.

"அப்பா திவசத்துக்கு வரேல்லையே?" மகன் கேட்டான்.
"வாறன், வாறன்" என்றபடியே இரண்டாவது ப்ளோரிலிருந்து தரைக்குக் கீழிறங்கினார். அவருக்கு இப்போது செத்தவீடு, திவசதினங்களுக்கெல்லாம் போவதற்கு விருப்பமில்லை. இந்தக் கொண்டாட்டங்களிலை மனம் ஈடுபட்டால் கெதியிலை உலகவாழ்க்கையைத் துறக்க நேரிடும் எனப் பயந்தார்.

திவசம் வலு தடல் புடலாக நடந்தது. ஐயர் மந்திரங்கள் ஓதினார். போனதடவை அஸ்தியை தண்ணீரிலை கரைக்கேக்கை சிவசம்பு கால் தவறி விழப் பாத்திட்டார். அது முதல் கொண்டு பயம் இரட்டிப்பாகிவிட்டது.
"இவள் பரமேசு என்னை இழுக்கப் பாத்திட்டாள். நல்லகாலம். தப்பி வந்திட்டன்" என்பார்.

திவசம் முடியும் தறுவாயில் மெல்ல நழுவி வீட்டிற்குப் போகப் பார்த்தார் சிவசம்பு.
"திவசத்துக்கு வந்தால் கட்டாயம் சாப்பிட்டுவிட்டுத்தான் போக வேணும்" என்று அடாத்துப் பிடியாக சிவசம்புவைப் பிடித்து விட்டார்கள். சாப்பிடுவதற்கு முன்பு ஐயரிட்டைப் போனார்.
"ஐயா! எனக்கொரு நூல் ஓதிக் கட்டிவிடுங்கோ. அடிக்கடி பரமேசு கனவிலை வாறாள்" நூல் ஒன்றைக் கையிலே கட்டிக் கொண்டார். நூலையும் சாப்பாட்டையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே சாப்பாட்டில் ஒரு பிடி பிடித்தார்.

வீட்டிற்குப் போகும்போது வாசலில் பரமேசுவின் அழகிய படம் பிறேம் போட்டுக் கொடுத்தார்கள். அதை வாங்கி அருகே இருந்த மேசைமீது வைத்து அழகு பார்த்தார். அதைக் கொடுத்துக் கொண்டிருந்த இரு இளம்பெண்களும் அவரை வியப்புடன் பார்த்தார்கள். இன்னும் இரண்டு படம் தாருங்கள்

**சுருதி**

என்று கேட்டு வாங்கினார்.

"பாத்தியேடி! தங்கைச்சியிலை எவ்வளவு பாசம் எண்டு. ஒண்டுக்கு மூண்டு படம் எடுக்கிறார்" என்றாள் ஒருத்தி.
"மனிசன் இவ்வளவு பாசத்தை வச்சுக்கொண்டு பயப்பிடுது" தூரத்தில் சிவசம்புவின் செய்கைகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் மகன்.

வீட்டிற்கு வந்ததும் கத்திரிக்கோல், ஸ்குறூட் றைவர் சகிதம் அங்குமிங்குமாக ஓடித் திரிந்தார் சிவசம்பு. தனது படுக்கை அறைக்குள் போய் நேற்று வந்த தனது மகளின் ஜேர்மன் கடிதத்தை எடுத்து வந்தார். மேசைமீது தான் கொண்டுவந்த தங்கையின் படங்களைப் பரப்பி பிஷியாகிப் போனார். பிறேமை நோண்டி நோண்டிப் பிடுங்கினார். தங்கையின் படங்களை அதனின்றும் கழட்டி எடுத்தார். ஜேர்மன் கடிதத்துடன் வந்த தனது மூன்று பேரப்பிள்ளைகளின் படங்களையும் அந்த பிறேமிற்குள் மாட்டினார். தங்கையின் படங்களை குப்பைத் தொட்டிக்குள் போடுவதற்காகப் போன அவர், பின்பு ஏதோ எண்ணம் கொண்டவராக மேசை லாச்சியை இழுத்து அதற்குள் அந்தப்படங்களை தள்ளி விட்டார். ரி.விக்கு முன்னால் இருந்த மகன் கடைக்கண்ணால் அவரது செய்கைகளைப் பார்த்தபடி இருந்தான்.

சற்று நேரத்தில் மகன் அவரின் படுக்கை அறையின் கதவை மெதுவாகத் திறந்து எட்டிப் பார்த்தான். அவரது மேசையில் மூன்று பேரப்பிள்ளைகளின் படங்களும் அழகாக சிரித்தபடி இருந்தன. சிவசம்பு குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்.